பத்திரிக்கை செய்தி

மின் கம்பத்தை மாற்றி அமைக்க ரூ.20,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய நிர்வாக பொறியாளர் கைது

புகார்தாரர் திரு.செந்தில்பிரபு, முதலிபாளையம், நீலாம்பூர் கிராமம், திருப்பூர் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரரின் தந்தைக்கு முதலிபாளையம், நீலாம்பூர் கிராமத்தில் 99 சென்ட் நிலம் உள்ளது. இந்த நிலத்தின் நடுவில் மின்பாதையும் மற்றும் மின் கம்பம் உள்ளது. புகார்தாரர் தன்னுடைய நிலத்தில் நடுவில் உள்ள மின்கம்பத்தை மாற்றி அமைக்கும்படி மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மாண கழக அலுவலகம், குரும்பபாளையம், கோயமுத்தூர் மாவட்டத்தில் விண்ணப்பித்திருந்தார். விண்ணபத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு.சபரிராஜன், நிர்வாக பொறியாளர், சோமனூர், கோயமுத்தூர் மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.20,000/- லஞ்சமாக தர வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை கோயமுத்தூர் மாவட்ட பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 17.06.2025, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.சபரிராஜன், நிர்வாக பொறியாளர், லஞ்ச பணம் ரூ.20,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.